[1986 மே 13

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஐஐ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

(ஓஓ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

(ஓஓ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு 1986.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1986), 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1986), மற்றும் 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1986) ஆகிய மூன்று சட்டமுன்வடிவுகளும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட

---

*1986-ம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது

1986 ஆம் ஆண்டு மே 5 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.